# வடக்கில் கடும் இராணுவ நடவடிக்கை

(கொழும்பு)
யாழ். குடாநாட்டில் கடும் இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று இராணுவ அதிகாரிகள் கொழும்பில் தெரிவித்தனர்.
ஊர்காவற்றுறையில் நேற்று முன்தினம் வீடொன்றிற்குள் புகுந்த இராணுவத்தினர் அங்கு வைக்கப்பட்டிருந்த வெடிகுண்டு வெடித்ததில்

(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 4-50

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 88 வைகாசி 1 ஆனிவரல் 29 இதழ்: 94

யாழ்ப்பாணம் புதன்கிழமை 15-5-1991

## சுற்றிவளைத்த படையினர் 12 வீடுகளை எரித்தனர்

(மட்டக்களப்பு)
மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள உன்னிச்சை 6-ம் கட்டைப் பகுதியில் நேற்று முன்தினம் தேடுதல் நடத்திய இராணுவத்தினர் தமிழர்களுக்குச் சொந்தமான 12 வீடுகளை எரித்து சம்பலாக்கியதுடன் பலரை கைது

(4-ம் பக்கம் பார்க்க)

## வின்னி மண்டேலாவுக்கு 6 வருட சிறை

(ஜொகானஸ்பேர்க்)
ஆபிரிக்க தேசியக் காங்கிரஸ் உப தலைவர் திரு நெல்சன் மண்டேலாவின் மனைவி திருமதி வின்னி மண்டேலாவுக்கு ஆள் கடத்தல் குற்றச்சாட்டிற்காக 6 வருடச் சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

(4-ம் பக்கம் பார்க்க)

## வடக்கு - கிழக்கு பகுதிகளில்

# யுத்த நிறுத்தம் கொண்டுவர அரசாங்க தரப்பில் தீவிர முயற்சி!

(கொழும்பு)

**வடக்கு கிழக்குப்பகுதியில் இம்மாத இறுதிக்குள் யுத்த நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் அரசாங்க தரப்பில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரியவருகிறது.**

**இதற்கென விடுதலைப் புலிகளுடன் உயர்மட்டத்தில் தொடர்பு கொள்வதற்கான நடவடிக்கைகளையும் அரசுமேற்கொண்டிருக்கிறது.**

இந்த மாத இறுதிக்குள் யுத்த நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்தி பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்திருப்பதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

இதே வேளையில் பேச்சுவார்த்தைக்கென அரசாங்கம் முன்னர் விதித்திருந்த மூன்று நிபந்தனைகளில் ஒன்றான தலைவர் திரு பிரபாகரன் நேரடியாக பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ள வேண்டும் என்ற நிபந்தனையை நீக்கிக் கொண்டுள்ளது.

பேச்சுவார்த்தைக்கு முன் ஆயுதங்களைக் கீழே போடுவது, ஏனைய தமிழ் குழுக்களையும் பேச்சு வார்த்தையில்

(4-ம் பக்கம் பார்க்க)

## ஜப்பானில் ரயில் விபத்து 38 பேர் மரணம்!

(டோக்கியோ)
ஜப்பானில் நேற்று நடந்த கோர ரயில் விபத்தில் 38 பேர் பலியாகியுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவ்விபத்தில் 400க்கும் அதிகமானோர் படுகாயமடைந்துள்ளதாகவும் கூறப்படுகின்றது.

மின்சாரத்தில் இயங்கும் பயணிகள் ரயிலும், உள்ளூர் சரக்கு ரயிலும் நேருக்குநேர் மோதியதில், இரண்டு ரயில்

[4-ம் பக்கம் பார்க்க]

## நீதியான தேர்தல் அவதானிகள் அறிக்கை

(கொழும்பு)
கடந்த சனிக்கிழமை நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தல் நீதியாகவும், நேர்மையாகவும், சுதந்திரமாகவும் நடைபெற்றதாக இலங்கை வந்த 'சர்வதேச அவதானிகள் குழு' அறிவித்துள்ளது.

தேர்தல் முறையீடுகள் குறித்து எதிர்க்கட்சிகள் பிரிட்

[4-ம் பக்கம் பார்க்க]

## பலாலியிலிருந்து ஆட்லறிஷெல் தாக்குதல் மூவர் மரணம், 15 பேர் காயம்

[யாழ்ப்பாணம்]
பலாலி இராணுவ முகாமிலிருந்து நேற்று மாலை நடத்தப்பட்ட ஆட்லறி ஷெல் தாக்குதலில் ஒரு குழந்தை, இரு மாணவர்கள் உட்பட மூவர் பலியானார்கள். பதினைந்து பொதுமக்கள் படுகாயமடைந்தனர்

வல்வெட்டித்துறை, வட்டுக்கோட்டை, பொன்னாலை ஆகிய இடங்களை நோக்கி இந்த ஷெல்கள் ஏவப்பட்டன.

வல்வை நோக்கி ஏவப்பட்ட ஷெல் தீருவில் மைதானத்தில் விழுந்து வெடித்தது

இந்த மைதானத்தில் விளையாடிக் கொண்டிருந்த மாணவர்கள் மத்தியில் 2 ஷெல்கள் விழ்ந்து வெடித்ததில் மாணவர் ஒருவர் ஸ்தலத்தில் தலை

[4ம் பக்கம் பார்க்க]

## பிரான்ஸ் குழு தாக்குதல்: விசாரணை ஆரம்பம்

(கொழும்பு)
வவுனியாவில் பிரான்ஸ் வைத்தியக் குழு மீது, அரச படையினர் நடத்திய வான் தாக்குதல் பற்றி விசாரிப்பதற்கென ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட தனி நபர் விசாரணைக்குழு, நேற்றுத் தனது விசாரணையை ஆரம்பித்தது.

இக்குழு, பொதுமக்களிடம் இது தொடர்பான விசாரணையை மேற்கொண்டது.

பத்து நாட்களுக்குள் தமது விசாரணை தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு இக்குழுவிற்குபணிக்கப்பட்டுள்ளது. (ரி)

## தீவுப்பகுதி ஒய்வூதிய வவுச்சர்கள்

[மானிப்பாய்]
இலங்கை வங்கி, மக்கள் வங்கிக் கிளைகளில் ஒய்வூதியம் பெற்றுவரும் இடம்பெயர்ந்த தீவுப்பகுதி மக்களின் ஏப்ரல் மாதத்திற்குரிய ஒய்வூதிய வவுச்சர்கள் தீவுப்பகுதி உதவி அரசாங்க அதிபர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இவ்வவுச்சர்களை உரியவர்

(4-ம் பக்கம் பார்க்க)

## அரசுப் பிரதிநிதி யாழ். வருவார்?

(கொழும்பு)
வடக்கு-கிழக்கில் யுத்த நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்த அரசு மேற்கொண்டுள்ள முயற்சியின் ஒரு கட்டமாகத் தமிழர் ஒருவர், அரசுப் பிரதிநிதியாக மிக விரைவில் யாழ்ப்பாணம் வரலாம் எனக் கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இவர் புலிகளின் முக்கிய தலைவர்களைச் சந்திப்பாரென எதிர்பார்க்கப்படுவதாகவும் அச்செய்தி மேலும் தெரிவித்தது. (சி)

## கரும்புலிகள் எழுச்சிநாள் யாழ். குடாவில் அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)
கரும் புலிகளின் எழுச்சி நாள், நேற்று யாழ். குடா நாடு எங்கும் அனுஷ்டிக்கப்பட்டது.

வீதிகள் தோறும் தோரணங்களும், மஞ்சள்-சிவப்பு வர்ணக் கொடிகளும் கட்டப்

(4-ம் பக்கம் பார்க்க)

## விடுதலைப் புலிகள் தாக்குதல்

# வவுனியாவில் 50 இராணுவம் பலி

[வவுனியா]
வவுனியா மாவட்டத்தில் கடந்த ஞாயிறு, திங்கள் ஆகிய இரு நாட்களில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் ஐம்பதுக்கும் அதிகமான இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்; பலர் காயமடைந்தனர்; இராணுவ வாகனங்கள் சேதமாக்கப்பட்டன. பல ஆயுதங்களும் மீட்கப்பட்டன. புலிகள் தரப்பில் இருபது போராளிகள் வீரமரணமடைந்தனர்.

வவுனியா மாவட்டத்திலுள்ள பல இடங்களில் புலிகளுக்கும் இராணுவத்தினருக்குமிடையில் தொடர்ச்சியாக கடும் மோதல்கள் இடம்பெற்றன.

(4-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## சோபிதா புத்தகசாலை

யாழ். நகரில் நியாய விலைக்கு அப்பியாசக்கொப்பிகள், பாடநூல்கள், பாடசாலை உபகரணங்கள், மீரா வெளியீடுகள் அனைத்துக்கும் சிறந்த ஸ்தாபனம் சோபிதா புத்தகசாலை, 363, கே. கே. எஸ். வீதி (முட்டாசுக்கடைச் சந்தி), யாழ்ப்பாணம்.

(சி 4670)

## பூஜைக்காக வாழும் பூவை

மீரா வெளியீடு குடும்பத்தில் தோன்றும் அனைத்துப் புயலுக்கும் அசையாது நிற்கும் பெண்ணொருத்தியின் புனிதமான வாழ்க்கையை சித்தரிக்கும் கதை'' சகல புத்தகசாலைகளிலும் விற்பனையாகின்றது.

[சி-4732]

## விற்பனைக்கு

சிறுபோக நெற்பயிர் செய்கை நீமியா உரத்தை அடிக்கட்டு உரமாகப் பாவித்துப் பயன்பெறுங்கள். விளைச்சலைப் பெருக்குகிறது பயிரைத் தாக்கும்நோய்கள், பூச்சிகளைத் தடுக்கிறது. கிலோ பக்கெற் ஒன்று ரூ. 10/-மட்டும். மிக்சிவைற்-யாழ்ப்பாணம்.

(எ-1300)

## செவ்வாய் மாற்றம்

இன்று யுத்தச்செவ்வாய் மாற்றம், நீசமடைந்து வியாழனோடு கூடி 5-7-91வரை சனியின் நேரடிக் கெட்டபார்வையால் சண்டை தீவிரமடையும். ஆகஸ்ட் வியாழமாற்றத்தால் ஓயும். ஜோதிட நூல்களுக்கும், ஜாதகங்களின் கணிப்புகளுக்கும் பேராசிரியர் சதியதாஸன், ஞானம்ஸ், சித்தன்கேணி.

(கி-4728)

## நியமனம்

(மானிப்பாய்)

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபராக மீண்டும் திரு. ரி. சந்திரசேகரம் நியமனம் பெற்றுள்ளார்.

இவர் முன்பு இக்காரியாலயத்தில் உதவி அரசாங்க அதிபராயிருந்து கடந்த மார்ச் மாதத்திலிருந்து யாழ். மாவட்ட மோட்டார்போக்குவரத்து உதவி ஆணையாளராக பணி புரிந்தவரென்பது குறிப்பிடத்தக்கது. (71)

## ஓய்வு பெற்றார்

(பண்டத்தரிப்பு)


கொக்குவில், தாவடி அரசினர் த. க. பாடசாலை உதவி அதிபர் திருமதி தவமணிசெல்லத்துரை கடந்த மாதம் தொடக்கம் தமது 31 வருட ஆசிரிய சேவையிலிருந்து ஓய்வு பெற்றார்.

0 0 0

மட்டுவில் மலேரியா தடுப்பு இயக்க வெளிக்கள உதவியாளராக கடமையாற்றிய திரு. சி. செல்வத்துரை தமது 29 வருட சேவையிலிருந்து கடந்த மாதம் ஓய்வு பெற்றார். (72)

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## 45-வது நாள் நினைவஞ்சலி



### லெப். பொஸ்கோ

(கணபதி ஸ்ரீரஞ்சன்)

தாயக மண்ணில்: 15-04-1969

தாயக மீட்பில்: 01-04-1991

நிமிர்ந்த நெஞ்சோடு நேருக்கு நேர் நின்று
புரிந்த போர்தன்னை நெஞ்சம்தான் மறக்குமோ?
வளர்ந்த புலிகளை வளர்த்த மாவீரனே!
பொஸ்கோ
கிளர்ந்தெழும் தமிழீழம் உனக்குத் தலை
வணங்கிடுமே!

குடும்பத்தினர்.

துன்னாலை கிழக்கு,
கரவெட்டி.

(சி-4731)

# 27 தமிழ் தட்டெழுத்தாளர் பரீட்சை மூலம் தெரிவு

(மாங்குளம்)

1990ம் ஆண்டு மே மாதம் நடைபெற்ற அரசாங்க தட்டெழுத்தாளர் பரீட்சையில் சித்தியடைந்துள்ள தமிழ் பரீட்சார்த்திகளின் பெயர்ப் பட்டியல் அண்மையில் வெளியாகியுள்ளது.

இப்பரீட்சையில் வடக்கு-கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த 25 பேரும் ஏனைய பகுதிகளைச் சேர்ந்த இருவரும் ஆக மொத்தம் 27 தமிழர் சித்தியடைந்துள்ளனர்.

மாவட்ட ரீதியாக யாழ்ப்பாணம்-19, கொழும்பு-01, அம்பாறை-01, முல்லைத்தீவு-01, திருகோணமலை-03, வவுனியா-01, புத்தளம்-01.

இப்பரீட்சையில் சித்தியடைந்துள்ளோர் விபரங்கள் பின்வருமாறு:

யாழ்ப்பாண மாவட்டத்தில் எஸ். சரஸ்வதி - அல்லாரை வடக்கு, கொடிகாமம். த. வசந்தி-சரத்தன் ரேட், நீர்வேலி. த. நந்தினி - அளவெட்டி வடக்கு, அளவெட்டி. த. மாலினி - கரணவாய் தெற்கு, கரவெட்டி. த. கணேசமூர்த்தி - கரவெட்டி மேற்கு, கரவெட்டி. ச. மகாலக்ஷ்மி - அரியாலை, யாழ்ப்பாணம். ராதிகா கணேசலிங்கம்-அம்மன் கோவிலடி, வல்வெட்டித்துறை. எஸ். திருவருட்செல்வி - வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம். வி. வை. நிர்மலா - அரியாலை, யாழ்ப்பாணம். எஸ். உதயராணி-திருநெல்வேலி மேற்கு, யாழ்ப்பாணம். பி. சந்திரராணி-334, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். கே. கணேஸ்வரி -சங்கானைமேற்கு, பண்டத்தரிப்பு. த. சந்திரகுமாரி - கச்சேரி, யாழ்ப்பாணம். பி. விஜயலக்ஷ்மி - தொல்புரம் கிழக்கு, சுழிபுரம் ஆர். இராஜேஸ்வரி-கொக்குவில் கிழக்கு, கொக்குவில். கே. மலர் அர்ச்சனி, 33, ஸ்ரீனிவாசகம் வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். த. வசந்தி-அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். ஆர். இராஜலக்ஷ்மி - வல்வெட்டித்துறை, என். செல்வமணி - துன்னாலை, பருத்தித்துறை.

கொழும்பு மாவட்டத்தில் வி. தேவகி-127, கிராண்ட் பாஸ் வீதி, கொழும்பு-14. அம்பாறை மாவட்டத்தில் ஆர் இராஜேஸ்வரி- இரண்டாவது டிவிஷன், காரைதீவு.

முல்லைத்தீவு மாவட்டத்தில் எஸ். திலகேஸ்வரி - கச்சேரி, முல்லைத்தீவு.

திருகோணமலை மாவட்டத்தில் அ. மாலினி-110 மெயின் வீதி, திருகோணமலை. பி. ஜெயந்தி-மாகாணசபை, திருகோணமலை. (150)

# 142 தமிழர் லிகிதர் பரீட்சையில் சித்தி

[மாங்குளம்]

சென்ற ஆண்டு நவம்பர் மாதம் நடைபெற்ற அரசாங்க இலிகிதர் சேவைக்கான போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்தோர் தொகை 2048 ஆகும்.

இவர்களில் சிங்களவர்கள் 1783 பேரும், இலங்கைத் தமிழர் 142 பேரும், முஸ்லீம்கள் 115 பேரும், இந்திய வம்சாவழித் தமிழர்கள் 5 பேரும், ஏனையோர் மூன்று பேருமாவர்.

சித்தியடைந்தோர்பட்டியல் வெளியாகி நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் விகிதாசாரப்படி 140 தமிழர்கள் நியமனம் செய்யப்படவுள்ளதாகவும் இதற்கான நேர்முகப் பரீட்சை அடிதங்கள் பொது நிர்வாக அமைச்சினால் அனுப்பப்பட்டு வருவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. [150]

# நாடு முழுவதும் இரண்டேகால் லட். அகதிகள்

(மாங்குளம்)

நாட்டில் 17 மாவட்டங்களில் 473 நலன்புரி நிலையங்கள் உள்ளன. 54, 011 குடும்பங்களைச் சேர்ந்த 2, 31, 417 அகதிகள் இவற்றில் உள்ளனர். 1, 01, 680 குடும்பங்களை சேர்ந்த 4, 42, 109 பேர் உறவினர்கள் நண்பர்களுடன் வசிக்கின்றனர்.

இடம் பெயர்ந்தவர்களுக்கு உணவு உதவி அளிப்பதற்காக தினமும் 60 முதல் 70 லட்சம் ரூபா அரசுக்கு தேவைப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (150)

# 10,000 விவசாயிகளுக்கு உதவத் திட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் கெயர் ஸ்தாபனம் யாழ். மாவட்டச் சிக்கனச் சேமிப்பு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் உட்பட அரச சார்பற்ற நிறுவனங்களின்மூலம் 10 ஆயிரம் விவசாயிகளுக்கு விவசாய உற்பத்திக்கு உதவி வழங்கும் திட்டத்திற்கு தேவைப்படும் இருமி நாற்றுகளை ப. நோ கூ. சங்கங்களின்மூலமாக சந்தைப் படுத்துவதற்கான பொறுப்பை ஏற்று அதனைச் சந்தைப் படுத்தி உதவுமாறு யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபையைக் கேட்டுள்ளது

இது சம்பந்தமான ஆலோசனை செய்து தீர்மானிப்பதற்காக இன்று 15ந் திகதி புதன் கிழமை காலை 10 மணிக்கு ப. நோ கூ. சங்க தலைவர்களின் கூட்டமொன்று யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. (153)

# எரிபொருள் திருட்டு
## சாரதியால் முறியடிப்பு

[யாழ்ப்பாணம்]

பருத்தித்துறை மந்திகைப் பகுதியில் பிரெஞ்சு வைத்தியர்கள் தங்கியுள்ள விடுதியில் நேற்றுமுன் தினம் அதிகாலை மந்திகை வைத்தியசாலைக்கென வைக்கப்பட்டிருந்த எரிபொருள்களை திருட முயற்சித்த சம்பவமொன்று அம்புலன்ஸ் சாரதியால் முறியடிக்கப்பட்டது.

இரண்டு நபர்கள் இரு பரல்களுடன் வந்து திருடமுயன்றுள்ளனர் என்றும் பின்னர் பரல்களையும் - ரியூபுகளையும் அவ்விடத்தில்விட்டு தப்பியோடியுள்ளனர் என்றும் தெரியவந்துள்ளது (56)

## யாருடையது?

(யாழ்ப்பாணம்)

திருமதி திரிசாந்திதேவி மகேஸ்வரன், 23, பிரதான வீதி, ரத்தோட்டை அடையாள அட்டை இல. 408110939V எனும் அடையாள அட்டையும் வேறு சில தஸ்தாவேஜுகளும் அடங்கிய டேர்ஸ் ஒன்று வடபிராந்திய முச்சக்கர மோட்டார் வண்டி ஊழியர் சங்க அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டது. உரியவர்கள் அலுவலக நேரத்தில் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளலாம்.

## குருபூஜை

(யாழ்ப்பாணம்)

வட்டு - சிவன் இந்துசமய அபிவிருத்திச் சங்க ஆதரவில் திருநாவுக்கரசு நாயனார் குருபூஜை சென்ற வியாழக்கிழமை வட்டு-திருநாவுக்கரசு வித்தியாலயத்தில் கொண்டாடப் பட்டது.

## இராசி பலன்

15-05-1991

புதன்கிழமை

பிரதமை மு. ப 8.45வரை ரோகினி பி. இ. 4 45வரை, சித்தயோகம் இராகுகாலம் காலை 11.53 முதல் 12 03வரை சுபநேரம் மாலை 4.23 முதல் 5.53 வரை.

மேடம்: கண்ணியக்குறைவு கடன்வரவு, கள்ளர்பயம்.

இடபம்: வரம்ச்சை வசதி சுபகாரியம், தொழில் சிறப்பு

மிதுனம்: மேலானநிலை, தானதர்மம் இனசனவருகை

கடகம்: நீண்டவாதம், பிரயாண அனுகூலம், சந்தோஷம்

சிங்கம்: புதிய சிந்தனை குடும்பமகிழ்ச்சி, தொழில் லாபம்.

கன்னி: நண்பர்பகை மனவேதனை; தொழில் பாதிப்பு.

துலாம்: மனைவியால் துன்பம், பணச்செலவு, இனசன விரோதம்.

விருச்சிகம்: காரியவெற்றி, கடிதஉறவு: பணவரவு

தனுசு: வீட்டில் மகிழ்ச்சி, பிதாவழிதொல்லை, அலைச்சல்

மகரம்: அந்நியவாசம், அகாலபோஜனம், அதிகயோசனை.

கும்பம்: கண்ணிக்ரோகம், தவறான சிந்தனை, குடும்பப் பிரிவு.

மீனம்: தனிமையடைதல், தொழில் நஷ்டம், புத்திரர் கவலை.

ஜோஸ்யர்

# கட்சித் தலைவர்களின் சூறாவளி தேர்தல் பிரசாரம்

தமிழ்நாட்டில் கட்சித் தலைவர்கள் தேர்தல் களத்தில் தீவிர பிரசாரத்தில் இறங்கு நேரம் வந்துவிட்டது. இறுதி நேர சூறாவளி தேர்தல் பிரசாரம் தொடங்கிவிட்டது.

கட்சித் தலைவர்கள், வேட்பாளர்கள் வீடுவீடாக நேரடியாகச் சென்று வாக்காளரின் ஆதரவைத் திரட்டும் யுக்தியில் இறங்கிவிட்டனர்.

இதனால் தேர்தல் காலங்களில் பிரசார வேலைகளில் ஈடுபட்டு உழைப்பு நடத்தி வந்தவர்களின் பாடு தடைப்பட்டு விட்டது.

எங்குபார்த்தாலும் டாக்ஸி வாடகைக்காரர்களின் தேவை வழக்கத்திற்கு மாறாக இந்த தேர்தலில் அதிகரித்துள்ளது. இதனால் கோடை கால சுற்றுலாப் பயணிகளுக்கு வாடகை கார் கிடைக்காமல் சிரமம் ஏற்பட்டுள்ளது.

தேசிய முன்னணிக்கு ஆதரவாக முன்னாள் பிரதமரும் ஜனதாதள் தலைவருமான திரு. வி. பி. சிங், சென்னையில் ஒரு நாள் பிரசார வேலையை முடித்துக்கொண்டார் இவர் அடுத்த வாரம் மீண்டும் ஒரு தடவை பிரசாரத்திற்காக தமிழ் நாடு வருவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

மார்க்ஸிஸ கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. யூ. நாயனார் பிரசாரத்திற்காக இங்கு வந்து சென்றுள்ளார்.

காங்கிரஸ் பிரசாரத்திற்காக ஏற்கனவே இங்குவந்த திரு. ராஜீவ்காந்தி மீண்டும் அடுத்த வாரம் பிரசாரத்திற்குவர இருக்கிறார்.

சமாஜவாதி ஜனதாதள் தலைவரும் பிரதமருமான திரு. சந்திரசேகர் மீண்டும் பிரசாரத்திற்கு தமிழகம் வரவிருக்கிறார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சிப் பொதுச் செயலாளர் கடந்த மாதம் பிரசாரம் செய்யவந்திருந்தார்.

தி. மு. க. கூட்டணி வேட்பாளருக்காக தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதி மே முதலாம் திகதி பிரசாரத்தை ஆரம்பித்தார்.

அ. தி. மு. க. பொதுச்செயலர் செல்வி ஜெயலலிதா கடந்த மாதம் 21-ம் திகதி தேர்தல் பிரசாரத்தை ஆரம்பித்தார்

இந்திய ஐக்கிய பொதுவுடமைக் கட்சி பொதுச்செயலாளர் கடந்த வாரம் பிரசாரத்திற்கு வந்திருந்தார்.

பாட்டாளி மக்கள் கட்சிக்காக கட்சித்தலைவர் டாக்டர் ராமதாஸ் பிரசாரத்தில் இறங்கியுள்ளார்.

தாயக மறுமலர்ச்சிக் கழகத் தலைவர் திரு. ராஜேந்தர் சமாஜவாதி ஜனதாதள் மற்றும் 1 கட்சி கூட்டணிக்காக பிரசாரத்தில் இறங்கியுள்ளார்

இத்தேர்தல் பிரசாரத்திற்காக ஒலி-ஒளி நாடாக்கள் கட்சிகளால் பெருமளவில் பயன்படுத்தப்பட்டுவருகிறது.

வழக்கம்போல் முக்கிய சந்திகளில் 60 அடி உயரமான கட்சித் தலைவர்களின் 'கட்அவுட்' காணப்படுகிறது: ராஜீவ், மு. கருணாநிதி, ஜெயலலிதா, வி. பி. சிங், எம். ஜி. ஆர். அறிஞர் அண்ணா, ஆகியோரின் 'கட் அவுட்' கள் நகரில் பல இடங்களை அலங்கரிக்கின்றன.

இதுதவிர அலங்கார வளைவுகள், பந்தல்கள், கொடிகள் சுவரொட்டிகள், பதாதைகள் மூலம் சென்னை நகரமே அழகாகக் காட்சியளிக்கிறது.

## வேட்பாளர் கைது

செல்வி ஜெயலலிதா போட்டியிடும் இருதொகுதிகளில் போட்டியிடும் சுயேட்சை

> கட்சித் தலைவர்கள்
>
> வேட்பாளர்கள்
>
> வீடு வீடாகச் சென்று
>
> ஆதரவு திரட்டும்
>
> யுக்தியில்
>
> இறங்கிவிட்டனர்

வேட்பாளர் ஒருவர் தேர்தலுக்கு சில தினங்களுக்கு முன்னர் தற்கொலை செய்து அந்த இரு தொகுதிகளிலும், தேர்தலை ஒத்திப் போடச்செய்யப்போவதாக அறிவித்ததைத் தொடர்ந்து அவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கூடுதலாக மாநிலம் முழுவதும் அமைதியாக தேர்தல் பிரசாரம் நடந்து வரும்போதும், ஒருசில இடங்களில் வன்முறை சம்பவங்கள் நடந்துள்ளன.

## அ. தி. மு. க. அணி

அ. தி. மு. க. இத்தேர்தலில் சட்டப்பேரவைக்கு 163தொகுதிகளிலும் மக்கள் அவைக்கு 11இடங்களிலும் போட்டியிடுகிறது இக்கட்சியின் சின்னத்தில் வேறு 5 கட்சிகளை சேர்ந்த 5வேட்பாளர் சட்டப் பேரவைத் தொகுதிகளுக்கு போட்டியிடுகிறார்கள் அ. தி. மு. க. வுடன் கூட்டணி அமைத்துள்ள காங்கிரஸ் 65 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கும் மக்களவைக்கு 27 இடங்களுக்கும் போட்டியிடுகிறது. இக்கட்சியின் சின்னத்தில் இந்திய பொதுவுடமைக் கட்சி சென்னையில் மக்களவைத் தொகுதிக்கும், மதுரைமேற்கு சட்டப் பேரவைத் தொகுதிக்கும் போட்டியிடுகிறது.

## தி. மு. க. அணி

தி. மு. க 171 சட்டப் பேரவை தொகுதிகளுக்கும் மக்களவைக்கு 29 இடங்களுக்கும் போட்டியிடுகிறது. இதன் தோழமைக்கட்சியான மார்க்ஸிச கம்யூனிஸ்ட்கட்சி மக்களவையில் 3 இடத்திற்கும் 22 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கும் போட்டியிடுகிறது; மற்றும் இந்த அணியை சேர்ந்த ஜனதாதள் மக்களவைக்கு 5 இடங்களுக்கும் 15 சட்டப் பேரவைத் தொகுதிகளுக்கும் போட்டியிடுகிறது. இந்திய கம்யூனிஸ்ட்கட்சி 10 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கும் மக்களவைக்கு 2 இடங்களுக்கும் போட்டியிடுகிறது. முஸ்லிம் லீக் லத்தீப் பிரிவு 4சட்டப்பேரவைதொகுதியில் போட்டியிடுகிறது. திருநாவுக்கரசு அணி 9 சட்டப் பேரவைத் தொகுதிக்கு போட்டியிடுகிறது. இந்த அணியில் பேசர்வார்ட்புளக், குடியரசு கட்சி ஒரு சுயேட்சையாளரும் போட்டியிடுகின்றனர்.

> தமிழ்நாடு தேர்தல்களம்

## பாட்டாளி மக்கள் கட்சி

பாட்டாளி மக்கள் கட்சி 34 மக்களவை இடங்களுக்கும் 200 பேரவைத் தொகுதியிலும் போட்டியிடுகிறது; எஞ்சியுள்ள 5 மக்களவை இடங்களுக்கும் 30 சட்டப்பேரவை தொகுதிகளுக்கும் முஸ்லிம் லீக் சமத் பிரிவு போட்டியிடுகிறது.

நூற்றுக் கணக்கான சுயேட்சை வேட்பாளர்கள், அநேக தொகுதிகளில் போட்டியிடுகிறார்கள்;

பாரதிய ஜனதாகட்சியுடன் இணைந்து போட்டியிடும் அம்பேத்கார் மக்கள் இயக்கம் மக்கள் அவையில் 5 இடங்களிலும் 55 சட்டப்பேரவைத் தொகுதிகளிலும் போட்டியிடுகின்றது.

எஞ்சியுள்ள தொகுதிகளில் பாரதிய ஜனதாகட்சி வேட்பாளர்களை நிறுத்தியுள்ளது. சமாஜவாதி ஜனதா கட்சியும் வேறு 16 கட்சிகளும் அனைத்து தொகுதிகளிலும் வேட்பாளர்களை நிறுத்தியுள்ளன.

---

## ★ இந்திய தேர்தலில் வன்முறை

# பலம் வாய்ந்த அரசு அமையுமா என அச்சம்!

(புதுடில்லி)

இந்தியாவில் இம்மாதம் 20ம், 23ம், 26ம் திகதிகளில் 22 மாநிலங்களிலும் தேர்தல் நடைபெறவிருக்கும் இவ்வேளையில் பரவலாக வன்செயல்கள் இடம்பெற்று வருகின்றன.

இதன் விளைவாகப் பலம் வாய்ந்த கட்சியொன்று அரசமைக்க முடியாது போய்விடுமெனத் தேர்தல் விமர்சகர்கள் எச்சரித்துள்ளனர்.

பஞ்சாப் மாநிலத்தில் இதுவரை 47 பேர் கொல்லப்பட்டுள்ளனர். ஆந்திரப் பிரதேசத்தில் இந்திரா காங்கிரஸ்காரர் நக்ஸலைட்டுகளின் பிரச்சனையை எதிர்நோக்கியுள்ளனர். சட்டசபைக் காங்கிரஸ் உறுப்பினரொருவர் கடந்த வாரம் கொல்லப்பட்டுள்ளார்.

தேர்தலைப் பகிஷ்கரிக்கும்படி கிளர்ச்சிவாதக் குழுக்கள் எச்சரித்து வருகின்றன. ஒரிஸா மாநிலத்தில் குண்டு வீச்சுத் தாக்குதலில் ஜனதாதள் கட்சித் தலைவர்கள் இருவர் கொல்லப்பட்டுள்ளனர்

ஜம்மு—காஷ்மீரில் மீண்டும் கிளர்ச்சி தோன்றியுள்ளதால் அங்கு தேர்தல் நடாத்துவது ஆபத்தானதெனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. உத்தரப் பிரதேசத்தில் தேர்தல் பிரச்சாரத்தின்போது 8பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

பீஹாரில் 18 பேர் உயிரிழந்துள்ளனர். 545 தொகுதிகளைக் கொண்ட பாராளுமன்றில் இவ்விரு மாநிலங்களிலுமிருந்து 139 பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இந்திய அரசு சுமார் 20லட்சம் பாதுகாப்புப் படையினரையும், ஒன்றரைக் கோடி பொலிஸாரையும் தேர்தல் கடமையில் ஈடுபடுத்தவுள்ளது. [ம]

# உப-உணவு பயிரிட உரம், கிருமிநாசினி இல்லை

(மாங்குளம்)

மன்னாரில் சிறுபோகம் மற்றும் உபஉணவுச் செய்கையை மேற்கொள்ள உரம் கிருமிநாசினிகள், எரிபொருள் தட்டுப்பாடு நிலவுவதாக தெரிவிக்கப்படுகிறது.

சென்ற வருடம் காலபோகம் செய்ய மழைவீழ்ச்சி இருந்த போதிலும் இராணுவ நடவடிக்கையால் மேற்படி விளைச்சல்கள் ஏமாற்றத்தையளித்தன

இருந்த போதிலும் தேவையான விதைநெல் உள்ளூரிலும், உபஉணவு பயிர்களுக்கான விதைகள் சர்வோதய நிறுவனத்தின் ஊடாகவும் பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இச்சிறுபோகத்திற்கு வி மிக்சர் 3,000 மெற்றிக் தொன்னும், அமோனியம் சல்பேற் 450 தொன்னும், ரி. டி. எம். (எஸ். ஏ.) 300 மெற்றிக் தொன்னும், மிளகாய் உரம் 50 மெற்றிக் தொன்னும் தேவைப்படுவதாகவும் தெரியவருகிறது.

சிறுபோகத்திற்கான ஆரம்ப வேலைகளை 5 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் ஆரம்பிக்கவும், உப உணவுச் செய்கையை மேற்கொள்ளவும் மண்ணெண்ணை தேவைப்படுவதாகவும் சொல்லப்படுகிறது;

இம்முறை இச்சிறுபோக வேளாண்மை தவறவிட்டால் மன்னார் மாவட்ட உணவு உற்பத்தி பாரதூரமான அளவு பாதிக்கப்படுமெனவும் அஞ்சப்படுகிறது (150)

## இடமாற்றம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் கடந்த ஒன்பது மாதகாலமாக பிற்பகல் வேளையில் இயங்கிவந்த தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி கடந்த 10-ம் திகதி தொடக்கம் அளவெட்டி அருணோதயக்கல்லூரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டு அங்கு பிற்பகல் வேளையில் செயற்பட்டு வருகின்றது. [7]

# மாதா காட்சிகொடுத்த பெண்ணை, பாப்பரசர் விரைவில் சந்திப்பார்

(நேபொலி)

பல வருடங்களுக்கு முன்பு, போர்த்துக்கலில் ஆடு மேய்க்கும் மூன்று சிறுவர்களுக்கு "அன்னை பதிமாதா" காட்சி கொடுத்ததாகச் செய்திகள் தெரிவித்தன

பதிமாதாவின் காட்சியைப் பெற்ற மூன்று சிறுவர்களில் இருவர் பெண்கள், ஒருவர் ஆண். இவர்களில் ஒரு ஆணும், பெண்ணும் இறந்துவிட்டனர்.

தற்போது மிக வயதான நிலையில் உயிரோடு போர்த்துக்கலில் இருக்கும் "லூசியா ஜீசஸ் சந்தோம்" என்னும் பெண்ணை, பாப்பரசர் போல் மிக விரைவில் சந்திக்கவிருப்பதாக வத்திக்கானிலிருந்து வெளியான செய்தியொன்று தெரிவிக்கின்றது; (வி)

# நக்ஸலைட்டுகள் கடத்திய எம்.எல்.ஏ. விடுதலை

(புதுடில்லி)

நக்ஸலைட்டுகளால் கடத்திச் செல்லப்பட்ட எம். எல். ஏ. சுதேஷ்குமார் விடுதலை செய்யப்பட்டார்.

ஆந்திர மாநில காங்கிரஸ் [ஐ] எம் எல். ஏயான திரு. சுதேஷ்குமார் கடந்த சனிக்கிழமை நக்ஸலைட்டுகளால் கடத்திச் செல்லப்பட்டார்.

நக்ஸலைட்டுகளின் வேண்டுகோளின்படி அவர்களின்சகாக்கள் நால்வரை அரசாங்கம் விடுதலை செய்ததைத் தொடர்ந்து திரு. சுதேஷ்குமாரும் விடுதலை செய்யப்பட்டார்.

திரு சுதேஷ்குமார் காட்டுப் பகுதியில் தனிமையில் விடுவிக்கப்பட்டார். இதன்பின் இவரைப் பொலிஸார் பாதுகாப்பாக ஹைதராபாத்துக்குக் கொண்டு சென்றனர். (வி)

# சட்ட விரோத ஏவுகணைகளை சோவியத், அமெரிக்கா அழித்தன

(மாஸ்கோ)

சோவியத்யூனியனும், அமெரிக்காவும் சட்டவிரோதமாகத் தயாரித்த ஏவுகணைகள் அனைத்தையும் அழித்துவிட்டதாக அறிவித்துள்ளன.

1987 ம் ஆண்டு முன்னாள் அமெரிக்க அதிபர் திரு. றொனல்ட் றேகனும், சோவியத் அதிபர் திரு. கோர்பச்சேவும் செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி இந்த ஏவுகணைகள் அழிக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

அமெரிக்கா சட்டவிரோதமாக தயாரித்த "பர்ஷிங்-3" அதிவேக ஏவுகணைகள் அனைத்தையும் அழித்துவிட்டதாகக் கூறிய மறுநாளே சோவியத்தும் சட்டவிரோதமாகத் தயாரித்த "எஸ் எஸ்-20" மின்னல்வேக ஏவுகணைகள் அனைத்தையும் அழித்துவிட்டதாகக் கூறியுள்ளது.

வால்காட் அருகேயுள்ள ஸ்சினியா என்ற இடத்தில் தனது கடைசி ஏவுகணையை அழித்துவிட்டதாக சோவியத் நேற்றுத் தெரிவித்தது. (வி)

# விடுதலைப்புலிகள் தாக்குதல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரம்பைக்குளம், கோழியா குளம், பூவசரங்குளம், மாதர் பணிக்கர் மகிழங்குளம் ஆகிய இடங்களில் நிலைகொண்டிருந்த ஆயிரக்கணக்கான இராணுவத்தினர் மீது கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணி தொடக்கம் மாலை 6-00 மணி வரை புலிகள் கடும் தாக்குதலை நடத்தினார்கள்.

புலிகளின் தொடர்ச்சியான தாக்குதலினால் நிலைகுலைந்த இராணுவத்தினர் பின்வாங்கி ஓமந்தைக்குச் சென்றனர்.

ஓமந்தையில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினரை நோக்கி கடந்த திங்கட்கிழமை காலை 7-30 மணி தொடக்கம் புலிகள் பயங்கர தாக்குதலைத் தொடுத்தனர்.

இத் தாக்குதலினால் பின் வாங்கிய இராணுவத்தினர் பேயாடி கூழாங்குளத்திற்குச் சென்றனர். இராணுவத்தினரின் வாகனங்களும் முற்றாகச் சேதமாக்கப்பட்டன.

இச்சண்டைகளின் போது விடுதலைப்புலிகள் தரப்பில் வீரமரணமடைந்த இருபது போராளிகளுக்கும் விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர். (வி)

## தீவுப்பகுதி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் யாழ் செயலகத்தில் தற்காலிகமாக இயங்கிவரும் தீவுப்பகுதிக்கான பணிமனையில் நேரடியாக பெற்றுச் செல்லுமாறு வேலணை ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர்கள் தெரிவித்துள்ளார்கள். [71]

## வடக்கில்

[1-ம்பக்கத் தொடர்ச்சி]

கில் எட்டுப்பேர் பலியானார்கள் இதனையடுத்தே யாழ். குடாவில் நேற்று நண்பகல் 12 மணிமுதல் இன்று மாலை 6-00 மணிவரையும் ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டு இத்தாக்குதல் நடத்தப்படுகிறது என்றும் கொழும்பில் இராணுவ அதிகாரிகள் கூறியதாக வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது. [ரி]

## வடக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நேரடியாக கலந்து கொள்ளச் செய்வது என்பனவே ஏனைய இரண்டு நிபந்தனைகளாகும். இந்த இரு நிபந்தனைகள் குறித்து அரசு தரப்பில் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

## பலாலியிலிருந்து

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சிதறிப் பலியானார். வேலும் மயிலும் பரஞ்சோதி (14வயது வல்வெட்டித்துறை- சிதம்பராக் கல்லூரி மாணவன்) என்பவரே இவ்வாறு கொல்லப்பட்டவர்.

வல்வெட்டித்துறை சுப்பிரமணியம் இராஜேஸ்வரன் [14 வயது], சிவானந்தன் ரஜனிகாந் (16 வயது), கிருஷ்ணன் [14 வயது), ஞானகுரு சஜந்லால் (15 வயது], அழகாம்பாள் [15 வயது] ஆகியோரும், மற்றொரு ஷெல் பழவத்தை என்னுமிடத்திலுள்ள ஒரு வீட்டு வளவில் விழுந்து வெடித்ததில் திருமதி அன்னப்பிள்ளை இரத்தினம் (64 வயது அல்வாய் கிழக்கு' திருமதி சிவபாக்கியம் தில்லைநாதன் (59 வயது புத்தூர் கிழக்கு) ஆகியோரும் காயமடைந்தனர்.

வட்டுக்கோட்டையிலுள்ள ஒரு வீட்டில் வீழ்ந்து வெடித்த இருஷெல்களில் ஒரு மாணவனும் ஒரு குழந்தையும் பலியானார்கள்.

டானியல் சாமுவேல (16 வயது] சதாசிவம் நாகுலன் [2½ வயது] ஆகியோர் இச் ஷெல் வீச்சில் பலியானார்கள்

செல்வி கிருஷாந்தி சாமுவல் (14 வயது) ராஜ் சாமுவல் (50 வயது) பானுமதி சதாசிவம் [37 வயது] சுகந்தி சதாசிவம் (17 வயது] புனிதம் சாமுவல் (47வயது) ஜேகான் தேவசகாயம் (31 வயது] ஆகியோரே வட்டுக்கோட்டையில் காயமடைந்தவர்களாவார்கள். (56)

## ஜப்பானில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களும் பலத்த சேதத்திற்குள்ளாகின. சமிக்கைகள் சரியான முறையில் இயங்காததாலேயே இந்த விபத்து ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (வி

## வின்னி

[1-ம் பக்கத் தொடர்ச்சி)

1987ல் நான்கு கறுப்பினத்தவர்களைக் கடத்தியதாகவும், அதில் ஓர் இளைஞரைக் கொலை செய்ததாகவும் இவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டு கடந்த சில வருடங்களாக நீதிமன்ற விசாரணை நடைபெற்றுவந்தது.

இத்தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்யப்போவதாகத் திருமதி வின்னி மண்டேலா கூறியுள்ளார். (சி)

## சுற்றிவளைத்த

(1ம் பக்கத் தொடர்ச்சி)

செய்து முகாமிற்கு கொண்டு சென்றனர்.

இப்பகுதியைச் சுற்றிவளைத்து தேடுதல் நடாத்திய போது புலிகளின் மிதிவெடிகளில் சிக்கி இரு இராணுவத்தினர் கால்களை இழந்துள்ளனர்.

முகாமுக்கு கொண்டு சென்ற பொதுமக்கள் சித்திரவதையின் பின்பு விடுதலை செய்யப்பட்டனர். (வி)

## கரும்புலிகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டு அலங்கரிக்கப்பட்டிருந்தன.

கரும் புலிகளான கப்டன் சிதம்பரம், கப்டன் ஜெயந்தன் ஆகியோரின் படங்கள் பொது இடங்களிலும், இல்லங்களிலும் வைத்து அஞ்சலி செலுத்தப்பட்டது.

பல இடங்களிலும் இவ்வீரர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் ஒலிபெருக்கிகளில் புரட்சிக் கீதங்கள் இசைக்கப்பட்டன

வலிகாமம், தென்மராட்சி, வடமராட்சிப் பகுதிகளில் கரும் புலிகளின் எழுச்சிக் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

மேற்படி கூட்டங்களில் பெருந்தொகையான மக்கள் கலந்து கொண்டனர். விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பிரமுகர்கள் பலர் இக்கூட்டங்களில் உரையாற்றினர். (வி)

# கொழும்பு சென்ற லொறிகள் திரும்பவில்லை

(பண்டத்தரிப்பு)

மண்ணெண்ணை, மா, பால் மா போன்ற அத்தியாவசிய உணவுப் பொருட்களை ஏற்றி வருவதற்காகக் கொழும்புக்குச் சென்ற பண்டத்தரிப்பு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் நான்கு லொறிகள், 26 நாட்களாகியும் இன்னும் திரும்பி வரவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது. (72)

## நீதியான

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

டிஷ் தூதர் ஆதாரத்துடன் பலத்தபுகார் தெரிவித்திருந்த போதும் இம்முறையீடுகளை சர்வதேச அவதானிகள் குழு புறக்கணித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

17 உறுப்பினர்களைக் கொண்ட இக்குழு 7500 வாக்குச் சாவடிகளில் 250க்கும் மேற்பட்ட நிலையங்களுக்கு நேரில் சென்று பார்வையிட்டது. (சி)


# Sri Lanka Red Cross Society
## Jaffna Branch

Wanted an Instructor in English. Preference will be given to a Retired English Trained Teacher with a knowledge of Stenography. Please apply before 20-05-91 and appear for an interview on 22nd May, 91 (1-00 p. m.) at our Office;

HONY. SECRETARY
73, Kandy Road,
Jaffna.

(A-1305)



# இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்

யாழ்ப்பாணக் கிளை

ஆரம்ப சுகாதார கவனிப்பு அமைப்பாளர்/ உதவி அமைப்பாளர்

## பதவிகளுக்கான வெற்றிடங்கள்

உடுப்பிட்டி, கரணவாய் வடக்கு

விண்ணப்பதாரருக்கு இருக்கவேண்டிய தகைமைகள்

1. கல்வி: க. பொ. த (சாதாரணம்) 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் சுகாதாரம், கணிதம் உட்பட 4 பாடங்களில் திறமைச்சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
2. சுகாதாரப் பயிற்சி: சுகாதாரத்தில் போதிய பயிற்சி பெற்றவராய் இருத்தல் வேண்டும். [ஆரம்ப சுகாதார கவனிப்பு] முதலுதவி பெற்றவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
3. சுகாதார வேலையில் அனுபவம் இருத்தல் வேண்டும்: (முக்கியமாக வெளிக்கள வேலையில்)
4. துவிச்சக்கர வண்டியில் சென்று கடமை புரியக் கூடியவராக இருத்தல் வேண்டும்.
5. பெண்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
6. வயதெல்லை— 25 க்கு மேற்பட்டவர்கள்.
7. மேற்குறிப்பிட்ட கிராமங்களில் அல்லது அண்மையில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
8. விண்ணப்ப முடிவுத் திகதி:- 20 - 05 - 1991
9. விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி:-

செயலாளர்,
இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
73, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

செயலாளர்,
செஞ்சிலுவைச் சங்கம், யாழ் கிளை
14 - 05 - 1991. (எ-1306)


# 31-ம் நாள் நினைவஞ்சலி



## கார்த்திகேசு — கதிராசிப்பிள்ளை

மலர்வு: 13 - 05 - 1902

உதிர்வு: 15 - 04 - 1991

15-5-91 ல் இவரது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திக் கிரியைகளில் உற்றார், உறவினர், நண்பர்களைக் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

இல. 5,
மேற்கு உருத்திரபுரம். (சி- 4735)

# மரண அறிவித்தல்

## சின்னத்துரை செல்வநாயகம்

M. B. E., P. J. K. (மலேசிய பென்சனர்)

மலேசியாவில் உயர்கல்வி அதிகாரியாகப்பணிபுரிந்து ஓய்வுபெற்ற திரு. சின்னத்துரை செல்வநாயகம் M. B. E., P. J. K. சிவபதமடைந்துவிட்டார். அன்னார் காலஞ்சென்ற மங்கையர்க்கரசியின் அன்புக் கணவரும், விசாலாம்பாள், அரியகுட்டியின் மைத்துனரும், காலஞ்சென்ற பத்மாவதி, புஷ்பா (ஓய்வுபெற்ற முன்னைநாள் ஆசிரியை, யாழ் இந்துமகளிர் கல்லூரி), டாக்டர் செல்வேந்திரா (அவுஸ்திரேலியா). அரிச்சந்திரன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத்தந்தையும், விஜயலட்சுமியின் வளர்ப்புத் தந்தையும், டாக்டர் S S. சோமசுந்தரம், மணி (அவுஸ்திரேலியா). விமலா (அவுஸ்திரேலியா). லோகதாசன் (இங்கிலாந்து), பேரின்பநாயகம் (பொலிஸ் அத்தியட்சகர், கொழும்பு), லோகேந்திரராணி, தயாநிதி. புவனேஸ்வரன் (கனடா) ஆகியோரின் மாமனாரும், விஜயாஈஸ்வரன் (நீர்ப்பாசனத் திணைக்களம், வவுனிக்குளம்), சிவா மனா. முரளீதரன், அஜீத், ரொமேஷ், சாவித்திரி. மாலதி, சித்ரா. மலர்மதி, ராதிகா சர்மிலா, கவிதா, அரவிந்தன், கார்த்திகா, விஜயந்தி, சாந்தி, அன்ரூ ஆகியோரின் பாட்டனும், யாழினி, ஜனகன் ஆகியோரின் பூட்டனும், பாலசிங்கம் (சித்ராலயா உரிமையாளர்), சிறீஸ்கந்தராஜா (பதிவாளர், யாழ் மேல்நீதிமன்றம்) ஆகியோரின் அபிமானத் தந்தையுமாவார். அன்னாரது இறுதிக்கிரியைகள் அவரது இல்லமான 'ஸ்ரீசைலம்', 151, கோவில் வீதி, நல்லூரில் 15-5-91 (புதன்கிழமை) இன்று மாலை 3-00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் செம்மணி மயானத்தில் அக்கினியுடன் சங்கமமாகும்.

தகவல்:
புஷ்பா செல்வநாயகம்.

(சி-4736)

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 65ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு மே மாதம் 15ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post office Sri Lanka under licence number B/103806/81.